**O.S.No. :53/2020**

**Dated :02.04.2024**

**வா.சா.1:ரவிச்சந்திரன், த/பெ. உச்சா கவுடர்**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ல் வரி ரசீதுகளில் பட்டா எண்.243 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.243 ல் எனது பெயரில் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 அனுபோக சான்றில் 3 சென்ட் பூமி அனுபோகம் செய்து வருகிறார் என சான்று அளிக்கப்பட்டுள்ளதால் அது விவசாயம் செய்து வருகிறார் என தான் குறிக்கிறது என்றால் சரியல்ல. அங்கு வீடும் உள்ளது. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள 3 சென்ட் நிலத்திற்கும் வா.சா.ஆ.2 ல் குறிப்பிடப்பட்டுள்ள 3 சென்ட் நிலத்திற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 வரி ரசீது 23.03.2020 அன்று அதாவது இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தான் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வரியை நான் முன்பிருந்தே செலுத்தி வருகிறேன். வழக்கு சொத்து வீடானது கட்டப்பட்டு சுமார் 70 வருடங்களுக்கு மேல் இருக்கும். எனது அப்பா மற்றும் தாத்தா காலத்தில் வரிகள் செலுத்தி உள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. 3 சென்ட் நிலம் எனக்கு பாத்தியப்பட்டுள்ளது என்பதை காண்பிக்க என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்றும் அதனால் இவ்வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்வதற்கு பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வீடானது எனது தாத்தாவால் கட்டப்பட்டு அதன் பின்பு நான் மராமத்து வேலைகள் செய்துள்ளேன். எனது தாத்தா வீடு கட்டுவதற்கு முன்பே பிரதிவாதி அவரது வீட்டை கட்டிவிட்டார் என்றால் சரியல்ல. எனது தாத்தா தான் முதலில் கட்டினார். பிரதிவாதியின் வீடு பழைய வீடு என்றும் அதை தான் அவர் இடித்துவிட்டு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. எனது மதில் சுவரை இடித்து விட்டு அங்கு அவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். பிரதிவாதியின்

வீடு முதலில் அவரது தாத்தாவால் கட்டப்பட்டது. அது கட்டப்பட்டு சுமார் 60 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு முன் பக்கம் அதாவது கிழக்கில் கேரி எனும் இடம் உள்ளது, அந்த கேரியை பொது மக்கள் அனைவரும் நடப்பதற்காக பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான். ஆனால் அது பட்டா நிலம் ஆகும். எனது வீட்டிற்கு பின் பக்கம் அதாவது மேற்கில் போஜன் என்பவரின் வீடு உள்ளது. நான் வாதுரையில் எனது வீட்டிற்கு மேற்கில் நடைபாதை என குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் தற்போது போஜனின் வீடு தான் உள்ளது. முன்பு நடைபாதை இருந்தது. தெற்கில் தான் நடைபாதை உள்ளது என்றும் ஆனால் நான் தெற்கில் போஜன் வீடு என தவறாக நான்கு எல்லைகளை எனது வாதுரையில் காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.4 புகைப்படத்தில் நீல நிறத்தில் உள்ளது என்னுடைய வீடு என்றும் அதன் அருகில் வீடு கட்டப்படும் நிலையில் உள்ளது பிரதிவாதியின் வீடு என்றாலும் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள நீல நிற வீடு மற்றும் கட்டுமான நிலையில் உள்ள வீடு எனது மற்றும் பிரதிவாதியின் வீட்டின் பின் பக்கம் என்றால் சரிதான். **(அந்த புகைப்படம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பி.வா.சா.ஆ.1 ல் இரு வீடுகளுக்கும் இடையில் இடைவெளி உள்ளது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் ஒரே சுவர் தான் என்றால் சரிதான். அந்த பொது சுவரை இடித்தால் எனது வீடும் இடிந்து விடும் என்றால் சரிதான். அந்த பொது சுவரை பிரதிவாதி தொடவில்லை என்றும் அவரது வீட்டை மட்டும் தான் இடித்து கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி பொது சுவரையும் தான் இடித்தார். வா.சா.ஆ.4 புகைப்படங்கள் ஜுன் 2020 ல் நான் கோயம்புத்தூர் சென்று வந்த பிறகு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் என்றால் சரிதான். பிரதிவாதி 2 அடுக்குகள் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான் அந்த இடங்கள் 2 தளங்களையும் கட்டுவதற்கு சுமார் 4 மாதங்கள் ஆகி இருக்கும் என்றால் சரிதான். நான் கோயம்புத்தூருக்கு 2020 ல் சென்றேன் எந்த மாதம்

என்று எனக்கு நினைவில் இல்லை. நான் கோயம்புத்தூர் சென்று 2020 ல் 9 மாதங்களாக உதகைக்கு வரவில்லை. நான் 9 மாதங்களாக கோயம்புத்தூர் இருந்தேன் என்று எனது வாதுரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வீடு கட்டும் 6 மாத காலமும் நான் உதகையில் தான் குடியிருந்தேன் என்றும் அவர் வீடு கட்டி முடிக்கும் வரை அமைதியாக இருந்து விட்டு அக்கட்டுமான பணிகள் முடியும் நிலையில் வேண்டுமென்றே இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது இடத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளாரா என்பதை நில அளவையர் வைத்து அளந்தால் தான் தெரியும் என்றால் சரிதான். நேரில் சென்று பார்த்தாலே தெரியும். நான் நில அளவையரை வைத்து வழக்கு சொத்தை அளப்பதற்கு நீதிமன்ற ஆணையர் கேட்டு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையாக பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்திருந்தால் நான் நீதிமன்ற ஆணையர் கேட்டு மனு தாக்கல் செய்திருப்பேன் என்றும் ஆக்கிரமிப்பு இல்லை என்பதால் தான் அவ்வாறு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 1/2 அடி அகலம் மற்றும் 10 அடி நீளத்திற்கு பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று சொல்லும் நிலையில் எந்த இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் எனது வீட்டின் முன் பக்கத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். அதைப்போல் 1 1/2 அடி அகலம் மற்றும் 30 அடி நீளத்திற்கு மேல் புறத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று கூறும் நிலையில் எந்த இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் எனது வீட்டின் கிழக்கில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். மேற்சொன்ன விவரத்தை எனது வாதுரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தனது இடத்தில் தான் வீடு கட்டியுள்ளார் என்றும் நான் சொல்வது போல் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனது வீட்டின் முன்பிருக்கும் கேரியில் பொது மக்கள் பல பேர் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லும் நிலையில் மற்ற நபர்கள் யாரும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்களா என்றால் இல்லை. பிரதிவாதி எந்த

பொது இடத்திலும் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றும் அவர் புதிதாக வீடு கட்டியுள்ளார் என்ற பொறாமையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது ஊரில் இந்த பிரச்சினை தொடர்பாக பஞ்சாயத்து நடந்ததா என்றால் நடந்தது. எந்த மாதம் நடந்தது என்றால் ஜூன் 2020 நடந்தது. அந்த பஞ்சாயத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் சரியல்ல. அவர் எனது சுவற்றை இடித்து தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என தீர்மானிக்கப்பட்டது. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Sd./A.Mohanakrishnan
District Munsif,
Udhagamandalam.

uploaded by
Typist.